**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**MCOP. No.401/2023**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 10–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக எ.ம.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: வருசை முகம்மது அன்சாரி** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 3 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 3 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் 2 ஆம் எதிர்மனுதாரருக்கு வழங்கிய பாலிசி (அசல் 1 ஆம் எதிர்மனுதாரர் வசம் உள்ளது) சான்றிட்ட உண்மை நகல் எ.ம.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 30.09.2024 அன்று 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு நகல் அலுவலக நகல் எ.ம.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தபால் உறையின் Unclaimed என திருப்பப்பட்ட அஞ்சல் உறை

அசல் எ.ம.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4 ஆம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தபால் உறையின் Unclaimed என திருப்பப்பட்ட அஞ்சல் உறை அசல் எ.ம.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5 ஆம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தபால் உறையின் No Such Address திருப்பப்பட்ட அஞ்சல் உறை அசல் எ.ம.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN–88–F–1338 (Eicher Lorry) வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN–88–F–1338 (Eicher Lorry) உண்மை நகல் எ.ம.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN–88–F–1338 (Eicher Lorry) வாகனத்தின் தமிழ்நாடு பெர்மிட் உண்மை நகல் எ.ம.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ஆம் எதிர்மனுதாரரின் செல்லாத ஓட்டுனர் உரிமம் உண்மை நகல் எ.ம.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போதைய உரிமையாளர் 5 ஆம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வாகன பதிவு சான்று வலைதள நகல் எ.ம.சா.ஆ.9. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் கடந்த 9 வருடங்களாக பணியிலிருந்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் வாகனம் TN–88–F–1338 என்று சொன்னால் சரிதான். 31.10.2020

முதல் 30.10.2021 வரையில் மேற்சொன்ன வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த தேதி 21.07.2021 என்று சொன்னால் சரிதான். விபத்து பாலக்கோடு கேரளா மாநிலம் தேசிய நெடுஞ்சலையில் நடந்தது என்று சொன்னால் சரிதான். வித்து நடந்து ஒரு வார காலத்திற்கு பிறகு தான் ஜான்செரிப் என்பவர் 29.07.2021 ஆம் தேதி கோயமுத்தூர் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். இறந்துபோனவர் கிளினராக இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இறந்துபோன நபர் மாதம் ரூ.20000/— சம்பாதித்த விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த காலகட்டத்தில் மேற்சொன்ன வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருப்பதால் மனுவில் சொல்லியுள்ள இழப்பீடு தொகை ரூ.20,00,000/— கொடுக்க உங்கள் நிறுவனம் கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.10 17:50:55 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.